# நெகிழி மாசில்லா தமிழ்நாடு – உறுதிமொழி

நெகிழி மாசில்லா தமிழ்நாடு!
நெகிழ்ச்சியான தமிழ்நாடு!
மகிழ்ச்சியான தமிழ்நாடு!!

இன்றைய மாணவர்களாகிய நாங்கள் உயிரினங்களுக்கு கேடு விளைவிக்கும் நெகிழியை முற்றிலும் தவிர்த்து, நாளைய தமிழ்நாட்டை பசுமையாக்கக் கூடிய இந்த நெகிழி மாசில்லா தமிழ்நாடு இயக்கத்தில் சேர்ந்து, நம்மையும் நம்மை சுற்றியுள்ள அனைத்து இடங்களையும் தூய்மையாக வைப்பது மட்டுமின்றி, மனித உயிர்களுக்கு தீங்கு தரக்கூடிய இந்த நெகிழியை நம் அன்றாட வாழ்வில் இருந்து அகற்றுவதோடு, ஏற்கனவே புழக்கத்தில் இருக்கும் நெகிழியை சரியான முறையில் அழித்து, அதற்கு மாற்றாக இருக்கும் இயற்கையால் ஆன பலதரப்பட்ட பொருட்களை பயன்படுத்தி மகிழ்ச்சியாகவும் நலமாகவும் வாழ்வோம் என்றும் தலைமுறை போற்றும் தொலைநோக்கு திட்டமாகிய நெகிழி மாசில்லா தமிழ்நாட்டை உருவாக்குவோம் என்றும் உளமாற உறுதி ஏற்கிறோம்.

நெகிழி மாசில்லா தமிழ்நாடு!
நெகிழ்ச்சியான தமிழ்நாடு!
மகிழ்ச்சியான தமிழ்நாடு!!

*****